**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

| |
|---|
| **நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)** |

ஜனவரி – பிப்ரவரி 2021

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாலடியார் எத்தனை பாடல்களைக் கொண்டது?
2. திரிகடுகம் என்பது எதனைக் குறிக்கும்?
3. நாநாற்பதில் எத்தனை நூல்கள் உள்ளன?
4. 'ஆசாரக்கோவை' பொருள் தருக.
5. பழமொழிநானூற்றின் ஆசிரியர் யார்?
6. சதகம் எத்தனைப் பாடல்களைக் கொண்டது?
7. எது சுட்டாலும் வெண்மை தரும்?
8. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவர் என உலக நீதி குறிப்பிடுபவர்களுள் ஒருவரைக் குறிப்பிடுக.
9. நீதநெறி விளக்கம் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
10. கலம்பத்தின் உறுப்புகள் எத்தனை?
11. திருக்கோவையாரின் ஆசிரியர் யார்?
12. பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் எத்தனை?
13. மூவருலாவின் ஆசிரியர் யார்?
14. தமிழில் தோன்றிய முதல் தூது நூல் எது?
15. 'அந்தாதி' – பொருள் தருக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பழமொழி நானூறு – குறிப்பு வரைக.
2. 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' – ஏன்?
3. தூது இலக்கியத்தை வகைப்படுத்தும் பாட்டியல் நூல்கள் எவை?
4. நந்திக்கலம்பகம் நூற்குறிப்புத் தருக.
5. திருக்கோவையாரின் ஆசிரியர் யார்? அந்நூல் தோன்றியச் சூழலைக் குறிப்பிடுக.
6. பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. எழுவகைப் பெண்கள் – வரிசைப்படுத்துக.
8. தமிழில் தோன்றிய முதல் அந்தாதி நூல் எது? அதனை இயற்றியவர் யார்? அவரது சிறப்பியல்புகள் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) ஆசாரக்கோவையின் ஒழுக்க நெறிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்வியின் சிறப்பை நீதிநெறி விளக்கத்தின் வழி விளக்குக.

2. (அ) சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சதக இலக்கியத்தின் பாடுபொருள்கள் எவ்வாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன என்பதை விவரி.

3. (அ) நும்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிற்றிலக்கிய மருத்துவ நூல்கள் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) அரசியல் குறித்த பழமொழி நானூற்றின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

***